வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

நாள்: 06.08.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

மோட்டார் வாகனம், ஜவுளி, சுற்றுலா உள்ளிட்ட 27 உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள், மேக் இன் இண்டியா திட்டததின் கீழ் கொண்டு வரப்பட்டு, பயன்பெற்று வருவதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஜன் தன் வங்கிக் கணக்குகள் மற்றும் அடிப்படை சேமிப்புக் கணக்குகளில், குறைந்தபட்ச இருப்புத் தொகை பராமரிக்கத் தேவையில்லை என்று, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெளிவுபடுத்தி உள்ளார்.

புதுச்சேரியில், புதிய துணை நிலை ஆளுநராக திரு. கைலாஷ்நாதன் நாளை பதவியேற்கிறார்.

புதுச்சேரி சட்டமன்ற கூட்டத் தொடரின் 5ஆம் நாளான இன்று அவையில், பட்ஜெட் மீதான பொது விவாதம் இடம்பெற்றது.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில், இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகாட், அரையிறுதி நிலைக்கு முன்னேறி உள்ளார்.

------------------------------

மேக் இன் இண்டியா (11)

பாதுகாப்பு, மோட்டார் வாகனம், உயிரி தொழில்நுட்பம், ஜவுளி, சுற்றுலா உள்ளிட்ட 27 உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள், மேக் இன் இண்டியா திட்டதின் கீழ் கொண்டு வரப்பட்டு, பயன்பெற்று வருவதாக, மத்திய தொழில்-வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாத் தெரிவித்துள்ளார். இன்று மக்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் அவர் இதை தெரிவித்தார். நாட்டில், முதலீட்டை பெருக்கி, புதுமையாக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம், உயர்தர உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் நோக்கத்திலான இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ், பல்வேறு அமைச்சகங்கள், மாநில அரசுகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இந்திய

தூதரகங்கள் மூலம், சர்வதேச முதலீட்டாளர்களை அணுகி, முதலீடுகள் நாடப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

------------------------------

வங்கிக் கணக்கு (11)

ஜன் தன் வங்கிக் கணக்குகள் மற்றும் அடிப்படை சேமிப்புக் கணக்குகளில், குறைந்தபட்ச இருப்புத் தொகை பராமரிக்கத் தேவையில்லைஎன்று, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெளிவுபடுத்தி உள்ளார். குறைந்தபட்ச இருப்புத் தொகை பராமரிக்கத் தவறியதற்காக, வங்கிகள், வாடிக்கையாளர்களிடம் கட்டணம் வசூலிப்பதாக இன்று மாநிலங்களவையில், துணைக் கேள்வி எழுப்பப்பட்ட போது, அவர் இவ்வாறு கூறினார். நிதி மோசடிகளை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ளாத கொள்கை ஒன்றை அரசு கடைபிடிப்பதாக, நிதித் துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி கூறினார். நிதி மோசடிகளை தடுக்க, வங்கிகள் மற்றும் ரிசர்வ் வங்கிகள்

மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும், அவர் அவையில் எடுத்துக் கூறினார்.

-------------------------------

*கருப்புப் பணம் (12)*

கருப்புப் பணத்தை கண்டுபிடித்து வரி விதிப்பதற்கான சட்டத்தின் கீழ், கடந்த நிதியாண்டின் இறுதி வரை, மொத்தம் 17 ஆயிரம் கோடி ரூபாய்க்கான 652 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 163 பேர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக, மத்திய நிதித் துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார். இன்று மக்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் அவர் இதை தெரிவித்தார். கணக்கில் காட்டப்படாத வெளிநாட்டு சொத்துக்களை வெளிப்படுத்த, 2015ஆம் ஆண்டு ஜூலை முதல் செப்டம்பர் மாதம் வரை வழங்கப்பட்ட அனுமதிக் காலத்தில், மொத்தம் 4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு சொத்துக்களை 648 பேர் வெளிப்படுத்தியதாக, அமைச்சர் தெரிவித்தார். இத்தகைய வழக்குகளில், வரி மற்றும்

அபராதமாக சுமார் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வசூலிக்கப் பட்டதாக அவர் மேலும் கூறினார்.

-----------------------------

*நிதி மசோதா* (15)

2024ஆம் ஆண்டிற்கான நிதி மசோதா இன்று மக்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் அமர்சிங், விவாதங்களை தொடக்கி வைத்து பேசுகையில், மத்திய பட்ஜெட்டில், உயர் வருமான பிரிவினருக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளதே தவிர, நடுத்தர வர்க்கத்தினர் மற்றும், குறைந்த வருமான பிரிவினருக்கு சலுகை எதுவும் இல்லை என குற்றம்சாட்டினார். நாட்டில் வேளாண் வளர்ச்சி குன்றி வரும் நிலையில், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது எப்படி என்றும் அவர் வினவினார். பிஜேபி உறுப்பினர் திரு. நிஷிகாந்த் தூபே, விவாதங்களில் பங்கேற்று பேசுகையில், ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு பட்ஜெட்டில் அறிவிக்கப் பட்டுள்ள சலுகைகளால், ஸ்டார்ட்-

அப் துறையினர் ஊக்கம் பெறுவார்கள் என்றும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் என்றும் கூறினார். அக்னி வீர் திட்டத்தை எதிர்கட்சிகள் குறை கூறுவதை அவர் ஆட்சேபித்தார். ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில், அமலாக்கப் பிரிவு, மற்றும் சிபிஐ-க்கு முழு சுதந்திரம் அளிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

------------------------------

*நகர எரிவாயு* (17)

நகர எரிவாயு வினியோகம் குறித்து, ஃபிக்கி-தொழில் வர்த்தக கூட்டமைப்பு இன்று புதுடெல்லியில் நடத்திய உச்சி மாநாட்டில், நகர எரிவாயு வினியோகத் திட்டங்களுக்கான நிதி, கொள்கை முன் முயற்சிகள், மற்றும், ஒழுங்குமுறை கட்டமைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது. அடுத்த 5 ஆண்டுகளில், எரிவாயு எடுத்துச் செல்வதற்கான 15 ஆயிரம் கிலோ மீட்டர் குழாய் பாதைகளையும், 17 ஆயிரம் சிஎன்ஜி மையங்கள், மற்றும், ஆயிரம் எல்என்ஜி மையங்களையும்

மொத்தம் 3 டிரில்லியன் ரூபாய் செலவில் அமைக்க, மத்திய அரசு திட்டமிட்டு வரும் நிலையில், இம்மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது. மாநாட்டின் தொடக்க அமர்வில், மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்தின் உறுப்பினர் திரு. கஜேந்திர சிங் பேசுகையில், தொழில்-வர்த்தகத் துறையில், அழுத்தமூட்டிய சிஎன்ஜி வாயுவின் தேவை, அதிகரித்து வருவதாக தெரிவித்தார். எல்பிஜி சிலிண்டர்களுக்கு பதிலாக, குழாய் மூலமான எரிவாயுவை பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகளை சாதாரண மக்களிடம் எடுத்துக் கூறுதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். நகர எரிவாயு வினியோகத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லுதல் என்பது குறித்த ஆய்வறிக்கை ஒன்றும் இந்நிகழ்ச்சியின் போது வெளியிடப்பட்டது.

------------------------------

*பங்களாதேஷ் (7)*

பங்களாதேஷ்-ல் மாணவர்கள் போராட்டத்தினால், தற்போது உருவாகி உள்ள நிலவரங்களை கருத்தில் கொண்டு, இந்தோ-பங்களாதேஷ் எல்லை அருகிலும், பாதுகாப்பை அதிகரிக்க, எல்லை பாதுகாப்புப் படை நடவடிக்கை எடுத்துள்ளது. எல்லைப் பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநர் திரு. தல்ஜீத் சிங் சவுத்ரி, இன்று, மேற்குவங்க மாநிலம், வடக்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தில், இந்தோ-பங்களாதேஷ் எல்லைக்கு நேரில் சென்று, படையினரின் செயல்பாட்டு தயார் நிலையை ஆய்வு செய்தார்.

------------------------------

*கைலாஷ்நாதன் (14)*

புதுச்சேரியில், புதிய துணை நிலை ஆளுநராக திரு. கைலாஷ்நாதன் நாளை பதவியேற்கிறார். நாளை 7ஆம் தேதி புதன்கிழமை காலை 11.15 மணிக்கு ராஜ்நிவாசில் பதவியேற்பு விழா நடைபெற உள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி திரு. கிருஷ்ணகுமார் இவ்விழாவில் புதிய துணைநிலை

ஆளுநருக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதிமொழியும் செய்து வைக்கிறார். இவ்விழாவில், புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர். பதவியேற்பு விழாவிற்கான ஏற்பாடுகளை ராஜ்நிவாஸ் செய்து வருகிறது. இதற்கிடையே, புதிய துணை நிலை ஆளுநராக நாளை பதவியேற்க உள்ள திரு.கைலாஷ்நாதன் இன்று பிற்பகல் புதுச்சேரி வந்தடைந்தார். ஆளுநர் மாளிகையில், முதலமைச்சர் திரு.ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைமைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள், அவரை வரவேற்றனர்.

-------------------------------

*சட்டமன்றம் (6)*

புதுச்சேரி சட்டமன்றத்தில், பட்ஜெட் மீதான பொது விவாதம் இன்று நடைபெற்றது. திமுக உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி, பிஜேபிஉறுப்பினர் திரு. கல்யாண சுந்தரம், நியமன உறுப்பினர் திரு. வி.பி ராமலிங்கம், சுயேட்சை உறுப்பினர்கள் திரு. நேரு-திரு. பி.ஆர். சிவா உள்ளிட்டோர் விவாதங்களில் பங்கேற்று பேசினர். இதை

தொடர்ந்து, அவையின் அலுவல்கள் நாளைக் காலை 9.30 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன.

-------------------------------

*ஏனாம்* (6)

ஏனாமில், அனைத்து அரசுத் துறை ஊழியர்களை போல நகராட்சி ஊழியர்களுக்கும் அரசுக் கருவூலம் மூலமாக ஊதியம் வழங்கக் கோரி, நகராட்சி ஊழியர்கள் இன்று, மண்டல நிர்வாக அதிகாரி அலுவலகம் முன்பாக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாநில நகராட்சி-கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர் சங்கங்களின் கூட்டுப் போராட்டக் குழு விடுத்திருந்த அழைப்பின் பேரில், இப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

-------------------------------

*விமானப் படை பயிற்சி* (9)

கோவை அருகே, விமானப் படை தளத்தில், தரங் சக்தி-2024 என்னும் சர்வதேச விமானப் படை பயிற்சி, இன்று முதல், வரும் 14ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் உட்பட 30 நாடுகள், தங்களின் அதி நவீன போர் விமானங்களுடன் இதில் கலந்து கொண்டு, பயிற்சியில் ஈடுபடுகின்றன. இந்திய விமானப் படையின் தேஜஸ், மிராஜ், மற்றும், ரஃபேல் ரக போர் விமானங்களும் இப்பயிற்சியில் பங்கேற்றுள்ளன. தரங் சக்தி விமானப் படை பயிற்சியின் 2ஆம் கட்டம், ராஜஸ்தானில் உள்ள ஜோத்பூர் விமானப் படை தளத்தில் வரும் 29ஆம் தேதி தொடங்கி, செப்டம்பர் 14ஆம் தேதி வரை நடைபெறும்.

------------------------------

*மீனவர் கைது* (7)

இன்று, மன்னார் வளைகுடாவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தூத்துக்குடி மீனவர்கள் 22 பேரை, இலங்கை கடற்படையினர் சுற்றி வளைத்து கைது செய்தனர். மீனவர்களின் 2 படகுகளையும், இலங்கை கடற்படையினர் பறித்துச் சென்றனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள், மேல் விசாரணைக்காக இலங்கையின் மன்னார் கடற்படை

தளத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர். மீனவர்களை விடுவிக்க, மத்திய-மாநில அரசுகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என, மீனவர் அமைப்புகள் கோரியுள்ளன.

------------------------------

*ஒலிம்பிக் (10)*

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் மகளிர் 50 கிலோ சுதந்திர பாணி மல்யுத்தப் போட்டிகளில், இந்தியாவின் வினேஷ் போகாட், காலிறுதிப் போட்டியில் உக்ரைன் வீராங்கனையை தோற்கடித்து, அரையிறுதி நிலைக்கு முன்னேறி உள்ளார். இன்று இரவு அரையிறுதிப் போட்டியில், கியூபா வீராங்கனையுடன் அவர் மோதுகிறார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் ஈட்டி எறிதல் பிரிவில், இன்று இந்திய வீரர் நீரஜ் சோப்ரா, 89.34 மீட்டர் தொலைவிற்கு ஈட்டி எறிந்து, இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். ஆடவர் ஹாக்கி பிரிவில், இந்தியா-ஜெர்மனி

அணிகளுக்கு இடையிலானஅரையிறுதிப் போட்டி, இந்திய நேரப்படி, இன்று இரவு 10.30 மணிக்கு நடைபெற உள்ளது.

-------------------------------

வயநாடு (17)

கேரள மாநிலத்தில், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாடு மாவட்டத்தில், சூச்சிப்பாறா சன் ரைஸ் பள்ளத்தாக்கு பகுதியில் மீட்புப் படையினர் தேடுதல் பணிகளை தொடக்கி உள்ளனர். இப்பகுதியை சென்றடைவதே கடினம் என்பதால், பயிற்சி பெற்ற 2 வனத் துறை அதிகாரிகள், மற்றும், ராணுவத்தினர் அடங்கிய 12 பேர் குழு ஒன்று, வான் வழியே அப்பகுதியில் இறக்கி விடப்பட்டு, சடலங்களை தேடும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இப்பகுதியில் கண்டெடுக்கப்படும் சடலங்களை வெளியே எடுத்து வர, ஹெலிகாப்டர் ஒன்றும் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, நிலச்சரிவு ஏற்பட்ட பல்வேறு பகுதிகளில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ராணுவத்தினர், மற்றும், தன்னார்வலர்கள்

அடங்கிய 40 குழுக்கள், இன்று 8ஆவது நாளாகவும், தேடுதல் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். நிலச்சரிவில் இருந்து மீட்கப்பட்ட சடலங்களில் அடையாளம் காண முடியாத 27 சடலங்களும், துண்டம் துண்டமாக கிடைத்த 154 உடல் உறுப்புகளும், புத்துமலா இடுகாட்டில், நேற்று அடக்கம் செய்யப்பட்டன. மேலும் உடல்களை புதைக்க வேண்டி இருப்பதால், மயானத்தை ஒட்டி கூடுதல் இடம் கேட்டுப் பெறவும் அதிகாரிகள் பரிசீலித்து வருவதாக, தகவல் வெளியாகி உள்ளது.

---------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மோட்டார் வாகனம், ஜவுளி, சுற்றுலா உள்ளிட்ட 27 உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள், மேக் இன் இண்டியா திட்டததின் கீழ் கொண்டு வரப்பட்டு, பயன்பெற்று வருவதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஜன் தன் வங்கிக் கணக்குகள் மற்றும் அடிப்படை சேமிப்புக் கணக்குகளில், குறைந்தபட்ச இருப்புத் தொகை பராமரிக்கத்

தேவையில்லை என்று, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெளிவுபடுத்தி உள்ளார்.

புதுச்சேரியில், புதிய துணை நிலை ஆளுநராக திரு. கைலாஷ்நாதன் நாளை பதவியேற்கிறார்.

புதுச்சேரி சட்டமன்ற கூட்டத் தொடரின் 5ஆம் நாளான இன்று அவையில், பட்ஜெட் மீதான பொது விவாதம் இடம்பெற்றது.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில், இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகாட், அரையிறுதி நிலைக்கு முன்னேறி உள்ளார்.